**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**ஜூலை – ஆகஸ்டு 2022**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. இறைவன் எவ்வாறு விளங்குகிறான்?
2. பசி வந்தபோதும் புல்லைத் தின்னாதது எது?
3. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
4. செந்தமிழின் இனிமைக்கு கூறப்படும் உவமை யாது?
5. கண்ணதாசன் இறுதியாக எழுதிய காவியம் யாது?
6. திருக்குறள் எந்தத் தொகை நூலுள் அடங்கும்?
7. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
8. காட்டு மூங்கில் கல்லால் உருவான இசைக்கருவியின் பெயர் என்ன?
9. பிரபந்தம் என்பதன் பொருள் என்ன?
10. பரமார்த்த குரு கதைகள் என்ற நூலை எழுதியவர் யார்?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. பண்புப் பெயர்கள் எத்தனை வகைகளில் அமைகின்றன?
2. கருவியாகு பெயருக்கு 2 எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
3. உயிர்நெடில் மாத்திரை அதிகமாக ஒலித்தால் அதன் பெயர் என்ன?
4. குறுக்கம் – வகைகள் யாவை?
5. பொம்மை தொடர் வண்டி எங்கு பயன்படுகின்றன?
6. குகைக்கோவில் என்றால் என்ன?
7. மன்னன் பாராட்டப்படும் போது எவற்றைப் பரிசாக அளிப்பார்?
8. பெரியாரைப் பற்றி திரு. வி. க. வின் கருத்து என்ன?
9. முகமது நபியின் முக்கிய நெறி யாது?
10. உணர்வு எதைக் கற்றுத்தரும்?
11. எழுதாக் கிளவி என்றால் என்ன?

12. நடந்தே அறிய வேண்டியது எது?
13. எது மனித வாழ்க்கை ஆகும்?
14. உலகத்தில் வாழ்கின்ற மக்கள் எதனைத் தேடுகின்றனர்?
15. அந்தாதி என்றால் என்ன?

**பகுதி – இ**

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. 'பிச்சை பாத்திரம் ஏந்தி உலகமெங்கும் இரந்து நிற்பார்கள்' என்று அபிராமி பட்டர் தன் பாடல் வழி உன் கருத்தை எழுதுக.
2. பருத்தி பூவே சிறந்தது என்று அமைச்சர் நலம் விரும்பி கூறியதற்குரிய காரணம் என்ன?
3. ஆவலுடன் காவலரும் ஆறுகால் வண்டினமும் – என்ற பாடலை விளக்குக.
4. குகன் தன் அன்பையும் வணக்கத்தையும் இராமனுக்கு எவ்வாறு விளக்கினான்?
5. நாட்குறிப்பு பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
6. உயிரளபெடையின் வகைகள் யாவை? அவற்றை உதாரணத்துடன் விளக்குக.
7. தொழில் பெயர் என்றால் என்ன? அவற்றின் விகுதிகளைக் கூறுக.
8. எச்ச வாய்ப்பாடுகள் யாவை? அவற்றை தகுந்த உதாரணத்துடன் விளக்குக.

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**

***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. வெற்றி யாருக்கு? – என்ற பாடப்பகுதியைத் தொகுத்து எழுதுக.
2. பாவின் வகைகள் மற்றும் பொது இலக்கணத்தைக் குறிப்பிடுக.
3. சித்தன்னவாசல் இயற்கை ஓவியங்கள் குறித்தும் அதில் இடம்பெற்றுள்ள வண்ணக் கலவையின் சிறப்பு குறித்தும் தொகுத்து எழுதுக.

**பகுதி – உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**

***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. வள்ளல் பாரியின் ஆட்சி சிறப்பு பற்றியும் பறம்பு மலையின் இயற்கை வளம் பற்றியும் ஒரு கட்டுரை வரைக.
2. ஆகுபெயரின் வகைகளை விளக்கி, ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.

*****